**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**C.C. No. 71/2008**

**வழக்கு சாட்சி PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **: பாண்டியம்மாள்** | தொழில் | : காவல் ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : ------ | கணவர் பெயர் | : ஞானவேல் |
| கிராமம் | : தாண்டிக்குடி | இனம் | : பெண் |
| தாலுகா | : தாண்டிக்குடி | வயது | : 40/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 27.07.2026 |

**( 1 மற்றும் 3 முதல் 6 எதிரிகள் ஆஜரில் உள்ளார். 2ம் எதிரி மனுவில் பேரில் ஆஜரி இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தாண்டிக்குடி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ராமநாதன் பணி ஓய்வு பெற்று நீரிழிவு நோய் காரணமாக இரண்டு கால்களையும் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு உடல்நிலை மோசமாக உள்ள காரணத்தினாலும் நீதியின் நலன் கருதி நீதிமன்ற காலவரைத்தை கருதியும் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் . கடந்த 10.08.2007 ம் ஆண்டு சார்வு ஆய்வாளர் திரு. பவுன் தாண்டிக்குடி காவல் நிலைய சார்வு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த

போது கொடைக்கானல் துணைகாவல் கண்காணிப்பாரிடம்இருந்து வரப்பட்ட தகவில்ன் அடிப்படையில் அமுதா என்பவரின் புகாரினை பார்வையிட்டு , அதன் தன்னை பெற்று நிலைய குற்ற எண் 115/2007 பிரிவுகள் 147, 148, 452, 323, 324, 354, 427, 506( ii) , 380 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார்.

சார்பு ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆகும். பின்னர் இவ்வழக்கையின் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் 10.08.2007 ம் தேதி 19.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன், சிவசாமி, ஆகியோர் முன்னிலைனயில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . ஆய்வாளர் தயாார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 3 மற்றும் அ.சா.ஆ. 4 ஆகும். மேலும் இவ்வழக்கின் தொடர்ப்புடைய சாட்சிகளான அமுதா , ஆர்த்தி, ராணி, நாகராஜன், அறிவழகன், ஆகியோர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

மேலும் இவ்வழக்கன் சம்பவம் உண்மையனெ தெரிய வர எதிரிகள் தேடிவந்த நிலையில் குற்றசம்பவத்தி ல்ஈடுபட்ட எதிரிகள் ஆலடிப்பட்டி பிச்சை ஒட்டல் வைத்து 12.09.2007 ம் தேதி காலை 10.00 மணியளவில் எதிரிகள் தாமரைக்கண்ணன்,

எழில்கண்ணன் ஆகியோர்கள் காரணம் கூறி கைது செய்து , தக்கவழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்பட்டுத்தியுள்ளார். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான பந்தல்ராஜன், செந்தில்குமார், சமையல் பரமசிவம் , செல்வன் ஆகியோர்கள் நீதிமனற்த்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்யவில்லை . 20.10.2007 ம் தேதி ஆய்வாளர் ராமநாதன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகள், பந்தல்ராஜன், தாரைக்கண்ணன், எழில்கண்ணன், செந்தில்குமார், சமையல் பரமசிவம், செல்வன் ஆகியோர்கள் மீது குற்ற எண் 115/2007 பிரிவுகள் 147, 148, 452, 323, 324, 354, 427, 506( ii) , 380 இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான் . பொதுவாக காவல் நிலையித்தில் புகார் கொடுக்கும் போது புகாரில் உண்மை தன்மை இருக்கும் பட்சத்தில் புகார் கொடுக்கும் அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். இவ்வழக்கானது சம்பவ தேதியை தொடர்ந்து 38 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வரப்பட்ட தகவலின் அடிப்படையில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் . வாதி நேரடியாக காவல் நிலையில் புகார் கொடுத்து இருக்கும் பட்சத்தில் அந்த புகாரானது இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது இறுதி அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் என்றால் சரிதான்.

அத்தகைய புகார் எதுவும் வழக்கு கோப்பு ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான் . புகாதாரின் சேலையை பிடித்து இழுத்ததாக சொல்லப்பட்டுயுள்ள நிலையில் அத்தகைய உடையானது சான்று பொருட்ளாக ஆய்வாளரால் கைப்பற்று உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை . இவ்வழக்கில் பணம் திருட்டு போனதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அத்தகைய பணம் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான் . பணம் இருந்ததற்கான ஆவணம் எதுவும் ஆய்வாளர் ராமநாதனால் கண்டறியப்படவில்லை என்றால் இறுதி அறிக்கையில் அத்தகைய குறிப்பு எதுவும் இல்லை.

எதிரிகள் கம்பு , கம்பிகள், ஆகியவற்றை பயன்படுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் அதை ஆய்வாளர் ராமநாதன் கைப்பற்றியுள்ளாரா என்றால் இல்லை . எதிரிகள் பொருட்களை சேதப்படுத்தியாக சொல்லியுள்ள நிலையில் அது

தொடர்ப்புடைய பொருட்கள் கைப்பற்றவில்லை என்றால் அதற்காகத்தான் புகைப்படம் கலைஞர் மூலம் சேதங்கள் புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது , ஆனால் புகைப்படங்கள் வழக்கு கோப்புகளில் இணைக்கப்பட்டு இருப்பதற்கான குறிப்புகள் இல்லை . சம்பவ இடத்தில் கைரேகை நிபுணர் கொண்டு விசாரணை மேற்கெள்ளப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு காயமுற்றதாக சொல்லப்படும் நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் யாரையும் ஆய்வாளர் ராமநாதன் சாட்சியாக விசாரணை செய்து , இவ்வழக்கின் பட்டியல் சாட்சியாக முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான்.

சேதப்படுத்தப்பட்ட பொருட்களை வாதியால் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . வழக்கு சம்பவத்திற்கு முன்பு வாதயின் கணவர் அறிவழகன் என்பவருக்கு அதே பகுதியை சேர்ந்த மணிகண்டன் என்பவருக்கும் பிரச்சனை நிலவி வந்தது என்றாலும் அதன் காரணமாக மணிகண்டன் என்பவர் தற்கொலை செய்து கொண்டார் என்றால் அத்தயை விவபம் எதுவும் இந்த வழக்கு தொடர்ப்புடைய இறுதி அறிக்கை கோப்பில் ஆய்வாளர் ராமநாதன் குறிப்பிடவில்லை. மணிகண்டன் தற்கொலை செய்து இறந்த காரணத்தினால் அவர் (அறிவழகன்) மீது எதிரிகள் புகார் கொடுத்தார்கள் என்றாலும் அதனால் எதிரிகளை பழி வாங்க

வேண்டி வாதி நடக்காத சம்பவத்திற்கு கொடுத்த புகாரை முறையாக விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல . எதிரிக்கு இவ்வழக்கிற்க்கு சம்பவம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court and

read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.27 17:00:02 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,

Kodaikanal.